SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: அதிசயப்பத்து**

**திருப்பெருந்துறையில் அருளியது**

* * * * *

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

வைப்பு மாடுஎன்று மாணிக்கத்து ஒளிஎன்று
மனத்திடை உருகாதே
செப்பு நேர்முலை மடவரலியர் தங்கள்
திறத்திடை நைவேனை
ஒப்பு இலாதன உவமனில் இறந்தன
ஒண்மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

நீதி ஆவன யாவையும் நினைக்கிலேன்
நினைப்பவரொடும் கூடேன்
ஏதமே பிறந்துஇறந்து உழல்வேன்தனை
என்அடியான் என்று
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்
நிரந்தரமாய் நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

முன்னை என்னுடை வல்வினை போயிட
முக்கண் அதுஉடைஎந்தை

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன்
எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதுஓர் புரிசடை முடிதனில்
இளமதி அதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

பித்தன் என்றெனை உலகவர்
பகர்வதோர் காரணம் இதுகேளீர்
ஒத்துச் சென்றுதன் திருவருட் கூடிடும்
உபாயம் அதுஅறியாமே
செத்துப் போய் அருநரகிடை வீழ்வதற்கு
ஒருப்படு கின்றேனை
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

பரவு வாரவர் பாடுசென்று அணைகிலேன்
பன்மலர் பறித்துஏத்தேன்
குரவு வார்குழலார் திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை
இரவு நின்றுஎரி ஆடிய எம்இறை
எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

எண்ணிலேன் திருநாமஅஞ்சு எழுத்தும்என்
ஏழைமை அதனாலே
நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணிலே பிறந்திறந்து மண்ணாவதற்கு
ஒருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற்கூட்டிய
அதிசயங் கண்டாமே.

பொத்தை ஊன்சுவர் புழுப்பொதிந்து உளுத்துஅசும்பு
ஒழுகிய பொய்க்கூரை
இத்தை மெய்யெனக் கருதிநின்று இடர்க்கடல்
சுழித்தலைப் படுவேனை

முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

நீக்கி முன்எனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையில் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகம்இன்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்அறத் துகள்அறுத்து
எழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர்
எழுதரு நாற்றம் போல்
பற்றல் ஆவதோர் நிலைஇலாப் பரம்பொருள்
அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயன்அது நுகர்ந்திடும்
பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

இருள்திணிந்து எழுந்திட்டதோர் வல்வினைச்
சிறுகுடில் இதுவித்தைப்
பொருள்எனக்களித்து அருநரகத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளும் மும்மதில் நொடிவரை இடிதரச்
சினப் பதத்தொடு செந்தீ
அருளும் மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
அதிசயங் கண்டாமே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *